
மனைப்பிரிவு வரைபடம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

திருநெல்வேலி மாவட்டம்
இராதாபுரம் வட்டம்
வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம்
தெற்குகருங்குளம் ஊராட்சி
கருங்குளம் கிராமம்
சர்வே எண்:613/2F1,614/1,615/5-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : CW34PVYQ/2025
அளவு : 1:400



வ.எண்	சர்வே எண்	பரப்பு (ச.மீ)
1	613/2F1	6300.00
2	614/1	3177.00
3	615/5	440.00
	TOTAL	9917.00

குறிப்பு

மனைப்பிரிவு இடத்தின் மொத்தப் பரப்பளவு	-	9917.00ச.மீ(2.45ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்கு பரப்பு	-	3480.00ச.மீ
மீதமுள்ள பரப்பளவு	-	6437.00ச.மீ
மனைப்பிரிவு இடத்தின் எல்லை	-	
உத்தேச மனைப்பிரிவு சாலை	-	
நிலையிலுள்ள சாலை	-	
கோரிய மனைகள்	-	43எண்ணம்
ஒதுக்கிய மனைகள்	-	43எண்ணம்

பொது ஒதுக்கீடுகள்:-

பூங்காவிற்கு TNCDBR-2019 விதி 47(6)ன் படி 643.70ச.மீ-க்கு அரசு வழிகாட்டி மதிப்பின் படி உரிய கட்டணம் ரூ.521397/- நாள்:21.05.2025-இல் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது

தெற்குகருங்குளம் ஊராட்சிக்கு தானப்பத்திரம் எண்:2073/2025, நாள்:19.05.2025 மற்றும் சீர்திருத்தப்பத்திரம் எண்:2346/2025, நாள்:02.06.2025 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

1.உத்தேச மனைப்பிரிவு சாலைகள் மற்றும் மூலைமுடக்கு பரப்பு - 3480.00ச.மீ

3.Ⓐ பொது உபயோக ஒதுக்கீடு (PUBLIC PURPOSE) - 32.71ச.மீ(0.50%)
(உள்ளாட்சி உபயோகம்)

(ii) தானப்பத்திரம் எண்:2072/2025, நாள்:19.05.2025 மூலம் TANGEDCOக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

Ⓑ பொது உபயோக ஒதுக்கீடு (PUBLIC PURPOSE) - 32.57ச.மீ(0.50%)
(TANGEDCO உபயோகம்)

மூலை முடக்கு : 12.00மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீ X 1.50மீ

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண்:71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்:16.06.2003-ன் படி நில உரிமம் குறித்து தலைவர், தெற்குகருங்குளம் ஊராட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் மனைப்பிரிவில் அமையும் சாலைகளின் பரப்பு மற்றும் மூலை முடக்கு ஆகியவற்றினை தெற்குகருங்குளம் ஊராட்சிக்கு தான பத்திரம் மூலம் மனுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கும் முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் தலைவர், தெற்குகருங்குளம் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.
4. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறையின் மூலம் உட்பிரிவு செய்து அதற்கான விவரங்கள் பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவு வாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
6. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்று சுவர் எழுப்புதல் கூடாது.
7. இம்மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த அழுத்த மின்கம்பி பாதையினை மனைப்பிரிவு சாலை வழியாக மனுதாரரின் சொந்த செலவில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

ம.வ./தில்.மா.ந.உள.எண்:SWP/47/2025

Signature Not Verified
Signed by: Joint Director
Location:Tirunelveli
Date:2025.06.11 11:17:55

Signature Not Verified
Signed by: Village Panchayat President
Location:Tirunelveli
Date:2026.03.26 17:22:22

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.